**STC.No. 392/2024**

**P.W.1**

| | | |
|---|---|---|
| திரு.ஆனந்த் | த/பெ. சிவராஜ் | Date: 26.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused absent. 317 crpc petition filed and allowed. )**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரியும் நானும் ஐந்த வருடமாக நண்பர்கள். எதிரியின் அப்பா பெயர் பாலகிருஷ்ணன். நான் விவசாயம் பார்க்கிறேன். எனக்கு விவசாய நிலம் 2 ஏக்கர் உள்ளது. நல்லான்குளம் கிராமம், சர்வே எண். 72 ல் உள்ளது. எதிரி 04.02.2024 அன்று என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அதற்கு முன்பு எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரிதான். அதற்கு முன்பு எதிரி கடன் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். 04.02.2024 காலை 11.00 மணியளவில் எதிரி என் வீட்டிற்கு வந்தார். எதிரி எனது வீட்டிற்கு காலை 11.00 மணிக்கு வந்தததகாக புகார் மனுவிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வீட்டில் விவசாய தேவைக்காக ரூ. 4 முதல் 5 லட்சம் வரை வைத்திருப்பேன். நான் வட்டிக்கு பணம் கொடுப்பதில்லை.

2) பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் என்னுடன் வேறு யாரும் இல்லை. காசோலையில் யார் கையெழுத்து செய்தார் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல. என் முன்பாக தான் கையெழுத்து செய்தார். மேற்படி விவரத்தை புகார் மனுவிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள விபரங்கள் அனைத்தும் என் கண் முன்பாக நிரப்பவில்லை என்றால் சரிதான். கையொப்பம் மட்டும் என் முன்பு செய்தார். காசோலையை யார் பூர்த்தி செய்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி என் வீட்டிற்கு வரும் போது காசோலையை பூர்த்தி செய்து கொண்டு வந்தார் என்றால் சரிதான். நான் கடன் கொடுப்பேனா அல்லது

கொடுக்கமாட்டேனா என்று எதிரி தெரியாமலேயே காசோலையை நிரப்பி கொண்டு வந்துள்ளார் என்றால் என்னிடம் எப்போதும் பணம் இருக்கும் என்பது எதிரிக்கு தெரியும்.

3) விவசாய நிலத்தில் செவ்வாழை பயிர் வைத்து வருகிறேன். எனக்கு வருட வருமானம் ரூ. 6 லட்சம் வரும். பொதுவாக கடன் பெறும் நபர் பணம் கொடுப்பாரா அல்லது கொடுக்கமாட்டாரா என்பது தெரியாமல் காசோலை முன்பே நிரப்பி கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் பணத்தை திருப்பி தருவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை காசோலையில் குறிப்பிட்ட தேதியில் போட சொன்னார். ம.சா.ஆ.5 ல் ஒப்புதல் அட்டையில் சரஸ்வதி கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அது எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் அது எதிரியின் அம்மா கையொப்பம், எதிரி அந்த கால கட்டத்தில் நாகர்கோவிலில் தனியாக வீடு எடுத்து வசித்து வந்தார் என்றாலும், அதனால் வழக்கறிஞருக்கு அறிவிப்பு விவரம் எதிரிக்கு தெரியாது என்பதால் தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

4) எதிரி டீ கடை வைத்துள்ளார். கடையின் பெயர் Hello டீ ஸ்டால் ஆகும். எதிரி 2017 ம் வருடம் என்னிடம் ரூ. 1 லட்சம் வாங்கவில்லை. 2017 ம் வருடம் எதிரி என்னிடம் ரூ. 1 லட்சம் மாத வட்டிற்கு வாங்கியிருந்தார் என்றாலும், அதற்கு மாதம் ரூ. 10, 000/– வீதம் செலுத்தி வந்தார் என்றாலும், பின்னிட்டு அசல் தொகை ரூ. 1 லட்சத்தையும் செலுத்தி இருப்பார் என்றாலும் அந்த கடன் கால கட்டத்தில் வெற்று காசோலை எனது கை வசம் கிடைத்தது என்றாலும், அந்த செக்யூரிட்டி காசோலையை தவறாக நிரப்பி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வாழைக்குலையை மொத்தமாக நாகர்கோவில் வியாபாரிகள் எடுப்பார்கள். ஒரு வருடத்திற்கு ஒரு முறை தான வாழைக்குலை வெட்டுவோம். எனக்கு அதில் லாபம் ரூ. 6 லட்சம் வரை கிடைக்கும். விவசாயத்தை தவிர வேறு எதுவும் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) மொத்த வியாபாரிகள் வாங்குவதற்கு ரசீதுகள் தருவார்கள் என்றால் இல்லை. மொத்த வியாபாரிகள் பொதுவாக வாங்கும் போது பத்து நாட்கள் கழித்து தான் பணம் கொடுப்பார்கள் என்பதால் அது குறித்து எழுதி தருவார்கள் என்றால் சரியல்ல. எனது வருமானத்தை பற்றி முறையாக ஆவணம் தாக்கல் செய்தால் நீதிமன்றத்திற்கு தெரிந்து விடும் என்பால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ. 3 லட்சம் வருமானம் பெறுவதற்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் ஏற்கனவே கொடுத்த வெற்று காசோலையை நிரப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH
Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.09.26 19:30:03 +0530

Judicial Magistrate,
Valliyoor.